18.10.2016

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### *தீபாவளி சீயக்காய்*

சிகை என்றால் கூந்தல், முடி என அர்த்தம்.கூந்தலுக்குப் பயன்படுவதால் சிகைக்காய் ஆனது. அதனால் தான் ஆங்கிலத்தில் சீயக்காயை 'புரூட் பார் ஹேர்' அதாவது 'முடிக்கான பழம்' என்ற அர்த்தத்தில் அழைக்கின்றனர். முடியில் உள்ள எண்ணெய்ப் பசை, அழுக்கை போக்க மட்டுமின்றி பூஞ்சை எதிர்ப்பு பொருளாகவும், தோல் நோய்களுக்கு மருந்தாகவும்சீயக்காய் பயன்படுகிறது. சீயக்காயின் இலைகள் புளிப்புத் தன்மை உடையன. ஆகலால் புளிச்ச கீரைக்கு பதிலாக இதைப் பயன்படுத்தி சட்னி செய்வர். சீயக்காய்பயன்படுத்திய பிறகு தனியாக கண்டிஷனர் பயன்படுத்த தேவையில்லை.

### உலக உணவு தினத்தையொட்டி சிறுதானிய, மூலிகை கண்காட்சி

திருநெல்வேலி: உலக உணவுத் தினத்தையொட்டி தமிழர்களிடம் இருந்து வழக்கொழிந்து வரும் சிறுதானிய உணவு மற்றும் மூலிகை தாவரங்களின் கண்காட்சி நெல்லை அரசு அருங்காட்சியகத்தில் நடந்தது.

அக்டோபர் 16ம் நாள் ஆண்டுதோறும் சர்வதேச உணவு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.
தமிழகத்தில் பாரம்பரிய உணவினை மறந்துவருகிறோம்.

காலம் காலமாக பயன்படுத்தி வந்த தினை,சோளம், கம்பு போன்ற சிறு தானியங்களை
தினசரி உணவில் சேர்ப்பதில்லை. எனவே சிறுதானிய உணவு வகைகளை நினைவுபடுத்தும் வகையிலும், வீடுகள் தோறும் வளர்க்க வேண்டிய மருத்துவ குணங்கள் கொண்ட வெட்டிவேர், தூதுவளை, கண்டங்கத்திரி,முடக்கத்தான் உள்ளிட்ட மூலிகை தாவரங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நெல்லை அரசு அருங்காட்சியகத்தில் கண்காட்சி நடந்தது. நெல்லை அரசு சித்த

மருத்துவக்கல்லூரியின் துணை முதல்வர் திருத்தணி, நிகழ்ச்சியில் பங்கேற்று சிறுதானியங்கள் மற்றும் மூலிகை செடிகளின் முக்கியத்துவம்

குறித்து பேசினார். நிகழ்ச்சியில் பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

## கொள்முதல் விலை உயர்த்த முடிவு

சென்னிமலை: கோ - ஆப்டெக்ஸ் நிறுவனம் பிரகம கைத்தறி சங்கங்களிடம் கொள்முதல் செய்யும் பெட்ஷீட் முதலான ரகங்களுக்கு உரிய விலை நிர்ணயம் செய்வதில்லை. இதனால், கூட்டுறவு சங்கங்கள் ஜவுளிகளை அசல் விலைக்கு கோ - ஆப்டெக்ஸ் நிறுவனத்திடம் கொடுத்து விட்டு, பணத்துக்காக காத்திருக்கும் நிலை இருந்தது. இதனால், கைத்தறி கூட்டுறவு சங்கங்கள் கடும் பாதிப்படைந்தன. இதுகுறித்து, தினமலரில் செய்தி வெளியானது. இதையடுத்து, கொள்முதல் விலையை உயர்த்தி, புதிய அடக்க விலை நிர்ணயம் செய்யும் பணியை தொடங்கி உள்ளதாக, ஈரோடு மாவட்ட கோ - ஆப்டெக்ஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இலை வரத்து குறைவால் பாதிப்பு

மஞ்சூர் : பசுந்தேயிலை வரத்து குறைவான தொழிற்சாலைகளுக்கு, பிற பகுதிகளில் இருந்து தேயிலை வினியோகம் செய்யப்படுகிறது.

மஞ்சூர், பிக்கட்டி, எடக்காடு, இத்தலார், மகாலிங்கா, கைக்காட்டி உட்பட எட்டு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில், 15 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள், தங்களது தேயிலை தோட்டத்தில் பறிக்கும் பசுந்தேயிலையை, தொழிற்சாலைகளுக்கு வினியோகித்து வருகின்றனர்.

நடப்பாண்டு துவக்கத்திலிருந்து, எதிர்பார்த்த அளவு மழை இல்லாத காரணத்தினால், தேயிலை செடிகள் வறண்ட நிலைக்கு மாறியதை அடுத்து, மகசூல் படிப்படியாக குறைந்தது. இதில், மஞ்சூர், கிண்ணக்கொரை, பிக்கட்டி, எடக்காடு உள்ளிட்ட கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கான, தேயிலை வரத்து அடியோடு குறைந்தது. நாளொன்றுக்கு அதிகபட்சம்,5,000 கிலோ வரைக்கு பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்படுகிறது.

அதே சமயத்தில், இத்தலார், மேற்குநாடு, மகாலிங்கா, கைக்காட்டி தொழிற்சாலைகளில், பசுந்தேயிலை வரத்து படிப்படியாக அதிகரித்துள்ளது.

நாளொன்றுக்கு, 15 ஆயிரம் கிலோ முதல், 20 ஆயிரம் கிலோ வரைக்கு பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்படுகிறது. இந்நிலையில்,

வரத்து குறைவான தொழிற்சாலைகளுக்கு, வரத்து அதிகமாக உள்ள தொழிற்சாலைகளில் இருந்து, பசுந்தேயிலை 'சப்ளை' செய்யப்பட்டு வருகிறது.

கூட்டுறவு அதிகாரிகள் அதிகாரிகள்,'சில தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை வரத்து குறைந்திருப்பதால், வரத்து அதிகமாக உள்ள இடங்களில் இருந்து இலை, சப்ளை செய்யப்படுகிறது' என்றார்.

## விரிச்சிப்பூ மலர் சாகுபடி: மாணவியருக்கு பயிற்சி

கிருஷ்ணராயபுரம்: மேட்டுமகாதானபுரம் பகுதியில், விரிச்சிப்பூ மலர் சாகுபடியில், நோய் தாக்குதல் குறித்து வேளாண் கல்லூரி மாணவியருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. கிருஷ்ணராயபுரம் தாலுகா, மகாதானபுரம் பஞ்சாயத்து பகுதியில், திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மாணவியர், பல்வேறு பயிற்சிகள் குறித்து நேரடியாக விவசாயிகளிடம் அறிந்து வருகின்றனர். மேட்டு மகாதானபுரம் பகுதியில், விவசாயி காந்தன் என்பவரது தோட்டத்தில், விரிச்சிப்பூ மலர் சாகுபடி உற்பத்தி குறித்தும், அதன் மூலம் பரவும் நோய் தாக்குதல் குறித்தும், களப்பயிற்சி மேற்கொண்டனர். அப்போது, வேளாண் அலுவலர்கள் மூலம், பல்வேறு கருத்துகள் எடுத்து கூறப்பட்டன.

## நெல் நாற்றங்கால் அமைக்க உழவுப்பணி

தேவதானப்பட்டி: கோயில்புரத்தில் முதல்போக நெல் சாகுபடிக்கு நாற்றங்கால் அமைக்கும் பணிக்கு உழவு செய்யப்படுகிறது.

பெரியகுளம் சுற்றுப்பகுதிகளில் ஆண்டுதோறும் செப்டம்பர் கடைசி, அக்டோபர் முதல் வாரத்தில் முதல்போக நெல் சாகுபடிக்கு நாற்றாங்கல் அமைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபடுவர். ஆனால் நடப்பு ஆண்டு தொடர் மழையில்லாததால், நீர்நிலைகள் அனைத்தும் வறண்டுள்ளது. சில இடங்களில் கிணற்று நீரை ஆதாரமாகக் கொண்டு குறைந்த பரப்பளவில் விவசாய பணிகள் நடந்து வருகிறது. இந்நிலையில் வடகிழக்கு பருவமழை நிச்சயம் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில் வடுகபட்டி, மேல்மங்கலம், கோயில்புரம் கிராமங்களில் முதல்போக நெல் சாகுபடிக்கு நாற்றாங்கால் அமைக்கும் பணி நடக்கிறது.

கோயில்புரம் விவசாயி ராஜாமணி கூறுகையில்,“ கடந்த ஒரு ஆண்டாக மழை இல்லை. கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து வறட்சி காணப்படுகிறது.பருவமழை பெய்யும் என்ற நம்பிக்கையில் நாற்றங்கால் அமைப்பதற்கு உழவு பணியை செய்து வருகிறோம்,”என்றார்.

## விதைகள் அறிமுக விழா

சின்னமனூர்: காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் புதிய ரக விதைகள் அறிமுக விழா நடந்தது. அறிவியல் மைய தலைவர் பச்சைமால் தலைமை வகித்தார். முதுநிலை விஞ்ஞானி மாரிமுத்து முன்னிலை வகித்தார். பண்ணை ஆராய்ச்சி திட்டத்தில் பயறு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்கும் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது. புதிய ரகங்களான கோ 8 பாசிப்பயறு, வி.பி.என்., 6 உளுந்து ரகம், ஒட்டுரக வெண்டை கோ 4 உள்ளிட்டவை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. தொழில்நுட்ப வல்லுனர் மகேஸ்வரன், ரகு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பயிர் காப்பீடு திட்டத்தில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு

வீரபாண்டி: மத்திய அரசின் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் சேர, விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சேலம், வீரபாண்டி வட்டார வேளாண் துறை சார்பில், ரபி பருவத்தையொட்டி, நெல், மக்காச்சோளம், உளுந்து, பச்சை பயறு மற்றும் நிலக்கடலை பயிர் செய்துள்ள விவசாயிகள், மத்திய அரசின், பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, ரபி பருவத்தில் பயிர் செய்யப்படும், அனைத்து வகை உணவு தானியப்பயிர் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றுக்கு, காப்பீட்டுத் தொகையில், 1.5 சதவீதம் மட்டும், ஒரு பருவத்துக்கான பிரிமியமாக செலுத்த வேண்டும். நெல், உளுந்து, நிலக்கடலை, ஏக்கர் ஒன்றுக்கு, அதிகபட்சம், 24 ஆயிரத்து, 500 காப்பீட்டு தொகையாக பெற முடியும். வணிக பயிர்களான வாழை, மரவள்ளி, வெங்காயம் மற்றும் பருத்திக்கு,

காப்பீட்டு தொகையில், 5 சதவீதம், ஒரு பருவத்துக்கு பிரிமியம் செலுத்த வேண்டும். அதன்படி, ஒரு ஏக்கருக்கு, 25 ஆயிரத்து, 500 முதல், 48 ஆயிரம் ரூபாய் வரை, பயிர் வகைகளுக்கேற்ப காப்பீடு கிடைக்கும். மேலும், பயிர்கடன் பெற்ற விவசாயிகளுக்கு, ஏற்கனவே பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பிரிமியம் தொகை, அவர்கள், வங்கி கணக்கில் இருந்து எடுத்துக்கொள்ளப்படும். பயிர் கடன் பெறாத விவசாயிகள், இதை முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு, நவ., 30ம் தேதி கடைசி நாளாகும்.

**வேளாண், கால்நடை விழிப்புணர்வு முகாம்**

கெங்கவல்லி: பெரம்பலூர் தந்தை ரோவர் வேளாண் கல்லூரி மாணவர்கள், கிராம தங்கல் திட்டத்தில், கெங்கவல்லி அருகே, கூடமலை கிராமத்தில் தங்கியபடி, விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்களை நடத்தி வருகின்றனர். நேற்று, வேளாண் மற்றும் கால்நடை விழிப்புணர்வு முகாம் நடந்தது. அதில், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு மூலம் ஏற்படும் நன்மை, புதிய தொழில்நுட்பம், திட்டங்கள், கால்நடைகளுக்கு தீவனம் வழங்கும் முறை, நோய் தாக்கம் கட்டுப்படுத்துதல் குறித்து, எடுத்துரைத்தனர். இதில், துணை தோட்டக்கலை அலுவலர் பாஸ்கரன், மாணவர்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

**பண்ணைக்குட்டை அமைக்க மானியம்**

கீழக்கரை: திருப்புல்லாணி வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) உலகு சுந்தரம் கூறுகையில், பருவமழை தொடங்குவதற்கு முன்பாக விவசாயிகள் பண்ணைக்குட்டைகள், உறை கிணறுகள் அமைப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

அரசு விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு 100 சதவீதம் மானியத்தில் பெற்றுக்கொள்ள சிட்டா அடங்கல், ரேஷன் கார்டு, போட்டோ-2, நில வரைபடம் ஆகியவற்றை திருப்புல்லாணி வேளாண்மை மையத்தில் வழங்கி பயனடையலாம், என்றார்.

## கமுதியில் சோளம் விவசாயம் செழிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி

கமுதி: கமுதி பகுதியில் வறட்சியை தாங்கும் சோளம் செழித்து வளர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

அதிக தண்ணீர் தேவையற்ற வறட்சியை தாங்கும் பயிர்களான சோளம், கம்பு, கேழ்வரகு விவசாயம் செய்ய கமுதி விவசாயிகளிடையே சமீப காலமாக ஆர்வம் அதிகரித்துள்ளது. இதனால் நெல், பருத்தி, மிளகாய் விவசாயத்தை பெரும்பாலான விவசாயிகள் தவிர்த்து, சோளம், கம்பு விவசாயம் செய்து வருகின்றனர்.

கமுதி அருகே பாக்குவெட்டி, கருங்குளம், மருதங்கநல்லுார், ஆனையூர் பகுதிகளில் சோளம் விவசாயம் செய்யப்பட்டு, பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளதால், இன்னும் சில மாதங்களில் மகசூல் கிடைக்கும்
என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## பயிர் வளர்ப்பு தொழில் நுட்பம்: விவசாயிகளுக்கு விழிப்புணர்வு

எருமப்பட்டி: நாமக்கல் மாவட்டம், வேட்டாம்பாடி பி.ஜி.பி., வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவியர், எருமப்பட்டி வேளாண் உதவி இயக்குனர் ராஜேந்திரன் தலைமையில், நாமக்கல்லில் உள்ள பல்வேறு ஒன்றியங்களில் தங்கி, விவசாயிகளை சந்தித்து, தேவையான ஆலோசனை பெற்று வருகின்றனர். எருமப்பட்டி ஒன்றியத்தில், பணியில் ஈடுபட்டுள்ள மாணவியர், பல்வேறு கிராமங்களில் விவசாயிகளுக்கு தேவையான பயிர் வளர்ப்பு, அதில் உள்ள புதிய தொழில் நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர். நவலடிப்பட்டி கிராமத்தில், மண்ணின் வளத்தைப் பற்றியும், அதை பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைத்தனர். மேலும், ராசயன உரம் இடுவதால் மண்ணிற்கும், மனிதனுக்கும் ஏற்படும் தீமைகளையும் விளக்கினர். விவசாயிகளிடம் இருந்து பயிர் சாகுபடி, பயிர் சாகுபடி தொழில் நுட்பங்கள், மகசூல் விவரம், உரமிடும் முறைகள், களை கட்டுப்பாட்டு முறைகள், பூச்சி நோய் நிர்வாகம், அறுவடை முறைகள், அறுவடைக்குபின் செய் நேர்த்தி முறைகள் உள்ளிட்டவற்றை மாணவியர் தெரிந்து கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## மறதியை விரட்டும் மஞ்சள்!



தினமும் ஒரே ஒரு டீஸ்பூன் மஞ்சள் தூளை உணவில் சேர்த்துக் கொள்ளச்சொல்கிறது ஓர் ஆராய்ச்சி. சேர்த்துக் கொண்டால் என்ன ஆகும் என்கிறீர்களா? மஞ்சளின் முக்கிய சாராம்சமான Curcumin, உங்கள் புத்திசாலித்தனத்தைப் பத்திரப்படுத்த உதவுமாம்.

அல்சீமர் நோயினால் பாதிக்கப்பட்டோரின் மூளையில் படிகிற புரதச் சேர்க்கையை சுருங்கச் செய்வதாகவும், அதனால் அவர்களுக்கு நோயின் தீவிரம் குறைவதாகவும் சொல்கிறார்கள் UCLA ஆராய்ச்சியாளர்கள். மறதி நோயைத் தீவிரம் ஆக்காமலும் காக்குமாம் மஞ்சள். மாமஞ்சள்!

## கொங்கணாபுரத்தில் 300 மூட்டை நிலக்கடலை □5 லட்சத்திற்கு ஏலம்

இடைப்பாடி, : சேலம் அடுத்த கொங்கணாபுரத்தில் நடந்த ஏலத்தில், 300 மூட்டை நிலக்கடலை □5 லட்சத்திற்கு விற்பனையானது.

சேலம் மாவட்டம் இடைப்பாடி அடுத்த கொங்கணாபுரத்தில், திருச்செங்கோடு வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கத்தில் வாரம்தோறும் நிலக்கடலை ஏலம் நடைபெறுகிறது. நேற்று நடந்த ஏலத்தில், தேவூர், செட்டிப்பட்டி, குள்ளம்பட்டி, கல்வடங்கம், பூலாம்பட்டி, கோனேரிப்பட்டி, சின்னப்பம்பட்டி, கோணசமுத்திரம், சமுத்திரம், புதுப்பாளையம், வேம்பனேரி, தாதாபுரம், எருமைப்பட்டி, ஆவணியூர், சங்ககிரி, வனவாசி, ஜலகண்டாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் 300 மூட்டை நிலக்கடலையை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். ஏலத்தில் 60 கிலோ எடை கொண்ட ஈரப்பதமுள்ள நிலக்கடலை மூட்டை □1700 முதல் □2 ஆயிரம் வரை விற்பனையானது. அதே போல், உலர்ந்த நிலக்கடலை □2200 முதல் □3 ஆயிரம் வரை விற்பனையானது. மொத்தம் 300 மூட்டை நிலக்கடலை □5 லட்சத்திற்கு விற்பனையானது. விவசாயிகளுக்கு கடந்த வாரத்தை காட்டிலும், மூட்டைக்கு □200 கூடுதலாக விலை கிடைத்தது.

## போச்சம்பள்ளி வாரச்சந்தையில் கொத்தமல்லி விலை சரிவு கட்டு ரூ.5க்கு விற்பனை

போச்சம்பள்ளி : ஓசூர், தேன்கனிக்கோட்டை சுற்று வட்டார பகுதி விவசாயிகள் அதிகளவில் கொத்தமல்லி பயிரிட்டுள்ளனர். அங்கு விளையும் கொத்தமல்லியை, போச்சம்பள்ளி வாரச்சந்தைக்கு எடுத்து வந்து விற்பனை செய்கிறார்கள். சேலம், தர்மபுரி, ஈரோடு, வேலூர் மாவட்டத்தை சேர்ந்த வியாபாரிகளும், போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதி பொதுமக்களும் வாரச்சந்தையில் கொத்தமல்லி வாங்கிச்செல்கின்றனர்.

தற்போது மழையின்றி வெயில் அடிப்பதால், சீதோஷண நிலை காரணமாக கொத்தமல்லி விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் சந்தைக்கு கொத்தமல்லி

வரத்து அதிகரித்துள்ளது. ஆனால் விலை சரிந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்து உள்ளனர். சந்தையில் கடந்த வாரம் கொத்தமல்லி கட்டு ஒன்று ரூ.30 முதல், ரூ.50 வரை விற்பனை செய்யப்பட்டது. நேற்றைய சந்தையில் கொத்தமல்லி கட்டு ஒன்று □5 க்கு விற்பனையானது. இதனால் மகிழ்ச்சியடைந்த பொதுமக்கள், போட்டி போட்டுக்கொண்டு 4 கட்டு வரை கொத்தமல்லியை வாங்கி சென்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: ஒரு ஏக்கரில் கொத்தமல்லி பயிரிட ரூ.25 ஆயிரம் செல்வாகிறது. கொத்தமல்லி 40 நாட்கள் பயிராகும். இதனால் விவசாயிகள் அதிகளவில் கொத்தமல்லியை பயிரிடுகின்றனர். ஒரு ஏக்கரில் கொத்தமல்லி பயிரிட்டால், ரூ.1 லட்சம் வரை லாபம் கிடைக்கக்கூடும். தற்போது வெயில் காரணமாக கொத்தமல்லி விளைச்சல் அதிகரித்துள்ள போதிலும், விலை சரிந்துள்ளதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. திரும்ப எடுத்துச்சென்று இருப்பு வைக்க முடியாது என்பதால், வேறு வழியின்றி கிடைக்கும் விலைக்கு கொத்தமல்லியை விற்பனை செய்கிறோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**மஞ்சள் விற்பனைக்கு வரத்து குறைவு**

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி ரகம் 60 குவின்டால், கிழங்கு ரகம் 20 குவின்டால் என மொத்தம் 80 குவின்டால் விற்பனையானது. அன்னூர், இருட்டுப்பள்ளம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதை, கோவை, பொள்ளாச்சி பகுதியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர்.

விலை விரலி மஞ்சள் குவின்டால் ரூ.7,569 முதல் ரூ.8,999 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.8,400. விற்பனை மதிப்பு ரூ.5.04 லட்சம். கிழங்கு மஞ்சள் குவின்டால் ரூ.7,299 முதல் ரூ.7,366 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.7,320. விற்பனை மதிப்பு ரூ.1.46 லட்சம். இரண்டு ரகமும் சேர்ந்து ரூ.6.50 லட்சத்திற்கு விற்றது. கடந்த இரண்டரை மாதங்களாகவே மஞ்சள் சராசரி விலை குவின்டால் ரூ.9 ஆயிரத்திற்கு கீழ் சரிந்த நிலையிலேயே உள்ளதால் விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர். விலை உயராததால், வரத்து வெகுவாக குறைந்துள்ளது.

**அரவக்குறிச்சியில் முருங்கை சீசன் துவக்கம்**

அரவக்குறிச்சி: அரவக்குறிச்சியில் முருங்கை சீசன் துங்கியுள்ளது. கிலோ ரூ.50க்கு விற்பனையாவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி பகுதியில் கொத்தப்பளயம், ஊத்தூர், தடாகோவில், வெஞ்சமாங்கூடலூர், ஈசநத்தம், அம்மாபட்டி, சாந்தப்பாடி உள்ளட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் முருங்கை சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் முருகை மிகவும் சுவையாக இருப்பதால் தமிழகம் மட்டுமின்றி டெல்லி, மும்பை பெங்களூர்.

காக்கிநாடா, விசாகபட்டினம், கொச்சி, எர்ணாகுளம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு தினமும் 15 முதல் 30க்கும் மேற்பட்ட லாரிகளில் அனுப்பி வைக்கப்படுகிறது. அறுவடை செய்த காய்களை 200 கிலோ எடையுள்ள மூட்டையாக கட்டி அரவக்குறிச்சி, ஈசநத்தம், இந்திராநகர், பள்ளபட்டி, ஆண்டிபட்டி, மலைக்கோவிலூர், ஈசநத்தம் ஆகிய இடங்களில் உள்ள விற்பனை மையங்களுக்கு விவசாயிகள் கொண்டு செல்கின்றனர்.

அங்கு விவசாயிகளிடம் இருந்து மொத்த வியாபாரிகள் வாங்கி பிற மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

தற்போது, முருங்கை சீசன் ஆரம்பித்துள்ளதால், இந்திரா நகர், பள்ளபட்டி, ஆண்டிபட்டி, மலைக்கோவிலூர், ஈசநத்தம் ஆகிய இடங்களில் உள்ள விற்பனை மையங்களில் விற்பனை சூடுபிடிக்க துவங்கியுள்ளது.

இதனால் அரவக்குறிச்சி சுற்றுப் பகுதியிலுள்ள முருங்கை விவசாயிகள் அருகேயுள்ள விற்பனை மையங்களுக்கு மொபட், லோடு ஆட்டோ உள்ளிட்ட வாகனங்களில் கொண்டு செல்கின்றனர். இன்னும் மூன்று மாதங்கள் சீசன் உள்ளதால், தற்போது முதல்போக விலை கிலோ ரூ.50க்கு வியாபாரிகள் வாங்குகின்றனர். இதனால் விவசாயிகள் திருப்தி அடைந்துள்ளனர்.

## திருவிடைமருதூர் பகுதியில் வெண்டை செடியில் வைரஸ்நோய் : வளர்ச்சி குன்றியதால் கடும் பாதிப்பு

திருவிடைமருதூர்: திருவிடமருதூர் மற்றும் திருப்பனந்தாள் ஒன்றிய பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள வெண்டைக்காய் செடியில் வைரஸ்நோய் தாக்கி செடிகள் வெள்ளைநிறமாக மாறி வளர்ச்சி குன்றியதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தஞ்சை மாவட்டம் திருவிடமருதூர், திருப்பனந்தாள் ஒன்றிய பகுதிகளில் காய்கனிபயிரான வெண்டை, கொத்தரை, அவரை, பூசனி உள்ளிட்ட பல்வேறு காய்வகைகளை விவசாயிகள் பயிரிட்டு வருவாய் பெறுகின்றனர். சம்பா மற்றும் தாளடி அறுவடைகள் முடிந்து வயல்களில் மெழுகுபதத்தில் உள்ள ஈரபத்தினைகொண்டு அதில் வெண்டை, கொத்தரை உள்ளிட்ட காய்கனிபயிர்களை பெரும்பாளான விவசாயிகள் பயிரிட தொடங்குவர். தற்போது மேட்டூர் அணைதிறக்கப்பட்டுள்ளதாலும், மழைகாலம் நெறுங்குவதாலும் நஞ்சை நிலங்களில் தண்ணீர் நிரம்பி நிற்கும்.

இதன் காரணமாக நஞ்சை நிலங்களில் காய்ச்சலும் பாய்ச்சலுமாக இருக்கூடிய காய்கனி பயிரை பயிரிட முடியாது. இதனால் தற்போது திடல் மற்றும் மேடான நிலங்களில் காய்கனி பயிரை பயிரிடுவார்கள். அந்த வகையில் வெண்டை அதிகளவில் பயிரிட்டுள்ளனர். தற்போது வெண்டை செடியில் வைரஸ் நோய் தாக்கி செடிகள் வளர்ச்சி இல்லாமல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து விவசாயி உத்ராபதி கூறுகையில்,வெண்டை பயிரின் காலம் 90 நாளாகும். பயிரிடும் விளைநிலங்களை பவர் டில்லரை கொண்டு நன்றாக புழுதிஉழவு செய்து, தண்ணீரை விட்ட இரண்டு அல்லது மூன்று நாட்களில் வாங்கிவந்த விதைகளை போடுவோம்.

5 முதல் 8 நாட்களுக்குள் முழுவதும் முளைப்பு கண்டுவிடும். பின்னர் 20 வதுநாளில் கூலிஆட்களை கொண்டு களைகளைவெட்டி பவர்டில்லர் மூலம் உழுது பின்னர் பார் அணைப்போம். அப்போது போதுமான அளவிற்கு யூரியா, டிஏபி உள்ளிட்ட உரங்களை கலந்து வைத்துவிடுவோம். தொடர்ந்து 35வது நாளில் பூ பூக்க தொடங்கி காய்க்க ஆரம்பிகசும். தொடர்ந்து (பயிரிட்ட நாள் முதல்) 90நாள் வரை ஒருநாள் விட்டு மறுநாள் வெண்டையை அறுவடை செய்யலாம். மாதம் ஒன்றுக்கு

(100குழி) அறுவடை செய்யும் நாட்களில் 50 முதல் 75 கிலோ வரை காய்கள் கிடைக்கும். இதனை சந்தைக்கு கொண்டு விற்பனை செய்து வருமானம் பெறுவோம். மாதம் ஒன்றுக்கு ரூ.30 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கும்.

இதில் செலவுத்தொகை போக ரூ.15 முதல் 20ஆயிரம் வரை வருமானம் கிடைக்கும். கிலோ ஒன்று குறைந்த பட்சம் ரூ.10 போனால் மட்டுமே இந்த வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. விதைத்த நாள்முதல் 10நாட்கள் இடைவேளியில் சாறுஉறிஞ்சும் பூச்சி உள்ளிட்ட பூச்சு தாக்குதலில் இருந்து விடுபட பூச்சிமருந்து அடிப்பது,த ண்ணீர் பாய்ச்சுவது உள்ளிட்ட பல்வேறு பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வருவோம். தற்போது அறுவடை காலங்களில் ரூ.5 மட்டுமே விலைபோனது. தற்போது, வைரஸ்நோய் பாதித்து வெண்டை செடிகள் வெள்ளை நிறத்திற்குமாறி வளர்ச்சி குன்றி மகசூல் குறைந்து பாதித்துள்ளது என்று வேதனையுடன் தெரிவித்தனர். அரசு தோட்டகலை துறை அதிகாரிகள் நேரில் வந்துபார்வையிட்டு பூச்சிதாக்குதல் பாதிப்பிலிருந்து விடுபட வழிவகை செய்ய வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## காரைக்காலில் கோழி வளர்ப்பு விவசாயிகளிடம் கலெக்டர் குறை கேட்டார்

காரைக்கால் : காரைக்காலில் கோழி வளர்ப்பு விவசாயிகளிடம் குறைகள் கேட்ட கலெக்டர் பார்திபன் கால்நடைத்துறை சார்பில் மானிய விலையில் வளர்க்கப்படும் கிரிராஜா, கிரிராணி கோழி வளர்ப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கால்நடைத்துறை அதிகாரிகளிடம் வலியுறுத்தினார். காரைக்கால் மாவட்ட கலெக்டர் பார்திபன் நேற்று மாவட்ட கால்நடைத்துறை இணை இயக்குனர் டாக்டர் லதாமங்கேஸ்கர் மற்றும் அதிகாரிகளுடன், நிரவி மற்றும் திருமலைராயன்பட்டினம் கிராமங்களில், கோழி வளர்ப்பு விவசாயிகளை நேரில் சந்தித்து கோழி வளர்ப்பில் உள்ள நிறைகுறைகளை கேட்டறிந்தார்.

அப்போது, அரசு மானிய விலையில் வழங்கும் கோழிக்குஞ்சுகள் மிகவும் குறைவாக உள்ளதாகவும், கோழி வளர்ப்பிற்கான தீவனம், வளர்க்க தேவைப்படும் செலவுகளை அரசு வழங்குவதில்லை. குறிப்பாக, கிரிராஜா, கிரிராணி கோழிவகைகளை அதிக அளவில் வழங்கினால் கோழி விவசாயிகள் அதிக லாபம்பெற ஏதுவாக இருக்கும் என்றனர். தொடர்ந்து, கிரிராஜா, கிரிராணி கோழி

வளர்ப்பு முறையை ஆய்வு செய்த கலெக்டர் பார்திபன், இனிவரும் காலங்களில் இந்த வகை கோழிக்குஞ்சுகளை அதிக விவசாயிகளுக்கு அதிக அளவில் வழங்கி கோழி வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியில் கால்நடைமருத்துவர்கள் ராஜகோபால், குமரன் மற்றும் பலர் உடனிருந்தனர்.முன்னதாக, மாவட்ட வருவாய்துறை மற்றும் வேளாண்துறை அதிகாரிகள் கலந்து கொண்ட ஆலோசானைக் கூட்டத்தில், கலெக்டர் பார்திபன் பேசுகையில், நடப்பு ஆண்டு முதல் ஒவ்வொரு பசலி ஆண்டிலும், ஆண்டுக்கு இருமுறை ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் விவசாயிகளுக்கு சாகுபடிக்கு பிந்தைய மானியம் வழங்க சாகுபடியாளர்கள் பட்டியல் தயாரிக்க அந்தந்த பகுதி வருவாய் கிராமங்களில் வருவாய்துறை மூலமாக வேளாண் அதிகாரிகள் துணையுடன் முகாம் நடத்த வேண்டும் என உத்தரவிட்டார். கூட்டத்தில், சார்பு ஆட்சியர் கேசவன், கூடுதல் வேளாண் அதிகாரி மதியழகன், வட்டாச்சியர்கள் பொய்யாதமூர்த்தி, முத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## வேளாண் கூட்டுறவு சங்கத்தில் விதை விற்பனை தொடக்கம்

பழநி, : பழநி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் விதைகள் விற்பனை தொடங்கியது.

பழநி, ஒட்டன்சத்திரம் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது நிலத்திற்கு ஏற்ற தரமான விதைகளை விதைப்பதன் மூலமே நல்ல மகசூல் பெற முடியும். ஆனால், தற்போது பழநி நகரில் உள்ள பல்வேறு விதை விற்பனைக் கடைகளில் தரமான விதைகள் விற்பனை செய்யப்படுவது இல்லை.விலைக் குறைவு என்று கூறி தரம் குறைந்த விதைகளையும், தரமான விதைகளை விலை உயர்த்தியும் விற்பனை செய்து வருகின்றனர்.

இதற்கான ரசீதுகளும் வழங்கப்படாததால் விவசாயிகள் இதுதொடர்பான மேல் முறையீடுகளுக்கும் செல்ல முடியாத நிலை இருந்து வந்தது. இதைத்தொடர்ந்து விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைப்பதற்காக பழநி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் விதைகள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நடப்புப் பருவத்திற்கு தேவையான ஜின்ஜிந்தா (என்.கே.6240), மான்சாண்டோ, பயனீர், சீ டெக் மற்றும் காவேரி போன்ற முன்னணி நிறுவனங்களின் விதைகள்

விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அனைத்து காய்கறி மற்றும் பயிர்களுக்கான விதைகளும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பழநி, ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி வட்டாரங்களில் உள்ள அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களிலும் விதைகள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.கடந்த ஆண்டு ரூ.32 லட்சத்திற்கு மேல் விதைகள் விற்பனை செய்யப்பட்டன. இந்த ஆண்டு இதன் இலக்கு மேலும் உயருமென பழநி வேளாண் விற்பனை கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக இயக்குநர் குணசேகரன் தெரிவித்துள்ளார்.

## அமோக விளைச்சல் தரும் புதிய நெல் ரகம் அறிமுகம்

பழநி, : அமோக விளைச்சல் தரும் புதிய நெல் ரகம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என வேளாண் உதவி இயக்குநர் சுருளியப்பன் தெரிவித்துள்ளார்.பழநி அருகே பாலசமுத்திரம் கிராமத்தில் நடப்பு ஆண்டில் குறுவை சாகுபடியாக கோ.51 எனும் புதிய நெல் ரகத்திற்கான விதைப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. கோ.51 நெல் ஆடுதுறை 43, ஆர்ஆர்272-1745 என்ற ரகங்களைக் கொண்டு இனப்பெருக்கம் செய்து உருவாக்கப்பட்டதால் ஒவ்வொரு குத்துக்களிலும் அதிகப்படியாக தூர்கள் வெடிப்பதுடன், ஒவ்வொரு தூரிலும் நெல் மணிகள் அதிகப்படியாக காணப்படுகின்றன. எனவே, ஏக்கருக்கு 12 டன் என்ற அளவில் அதிகப்படியான விளைச்சல் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

குறுகிய வயதுடைய (105- 110 நாட்கள்) இருப்பதால் நாட்கள் குறைவாகவும், அதனால் நீர்த்தேவை குறைவாகவும், சாகுபடி செலவு குறைவதுடன் அதிக மகசூலும் அதன்மூலம் அதிக வருவாயும் கிடைக்கும். மேலும், குலைநோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு சக்தி கொண்டதாகும். மோசமான பருவநிலையையும் தாங்கக்கூடியது.

கோ 51 நெல் விதைப்பண்ணை மூலம் பெறப்படும் அனைத்து நெல்விதைகளும் கொள்முதல் செய்யப்பட்டு, விதை சுத்திகரிப்பு செய்து, சான்றட்டை பொருத்தியதும் முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு விதை உற்பத்திக்காக விநியோகிக்கப்பட்டு வருகிறது.நடப்பு ஆண்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் 20 ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட உள்ளதாக வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மகசூல் இழப்பீடு ஏற்பட்டால் காப்பீட்டுத்தொகை கிடைக்கும்

திண்டுக்கல், : மத்திய அரசின் பிரதான்மந்திரி பசல்பீமா யோசனா பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்கு சாணார்பட்டி வட்டாரத்தில் வெவ்வேறு கிராமங்களும், பயிர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.இதன்படி நெற் பயிருக்கு அஞ்சுகுழிப்பட்டி, வேம்பார்பட்டி, டி.பஞ்சம்பட்டி, கூவனூத்து, திம்மணநல்லூர், டி.புதுப்பட்டி, சக்கிலியன்கொடை, கணவாய்பட்டி, மருநூத்து, ஜோத்தாம்பட்டி, விஎஸ்.கோட்டை, மார்க்கம்பட்டி, கம்பிளியம்பட்டி, தேத்தாம்பட்டி, செங்குறிச்சி, சிலுவத்தூர், மடூர், வங்கமனூத்து, ராஜக்காபட்டி, ராகலாபுரம் ஆகிய கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இதேபோல் மக்காச்சோளப் பயிருக்கு கூவனூத்து, தவசிமடை ஆகிய கிராமங்களும், உளுந்திற்கு ராஜக்காபட்டி, ராகலாபுரம் ஆகிய கிராமங்களும், துவரைக்கு செங்குறிச்சி, நிலக்கடலைக்கு சக்கிலியன்கொடை, கம்பிளியம்பட்டி, செங்குறிச்சி ஆகிய கிராமங்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

கரும்புப்பயிரைப் பொருத்தளவில் டி.பஞ்சம்பட்டி கிராமம் தேர்வாகி உள்ளது. நெற் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.325.50ம், மக்காச் சோளத்திற்கு ரூ.181.50, உளுந்து, துவரைக்கு ரூ.180, நிலக்கடலைக்கு ரூ.250 பிரீமியத்தொகை செலுத்த வேண்டும்.இதை அந்தந்தப்பகுதி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தலாம்.மேற்கண்ட கிராமங்களில் ராபி பருவத்தில் பயிர்சாகுபடி செய்ய உள்ள பயிர்களில் மகசூல் இழப்பு ஏற்பட்டால் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.நெல்லிற்கு வரும் அக்.30க்குள்ளும், இதர ராபி பயிர்களுக்கு வரும் ஜன.15ம் தேதிக்கு முன்பாகவும் பிரீமியத்தொகை செலுத்த வேண்டும் என்று சாணார்பட்டி வட்டார வேளாண் உதவி இயக்குநர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

## தாக வறட்சிக்கு அன்னாசி தாது விருத்திக்கு பலாக்காய்

அன்னாசி பழத்தை துண்டு செய்து சுவைக்கலாம் அல்லது சாறு எடுத்துப் பருகலாம். கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் பயிரிடப்படுகிறது. இப்பழத்தை உணவுக்குப்பின் உண்பதால் எளிதில் ஜீரணமாகும்.

பழுக்காத காயின் சாறு பெண்களுக்கு கர்ப்பப்பையில் சுருக்கத்தை ஏற்படுத்தும். அன்னாசி இனிப்பான பழம் என்றாலும் அதற்காக அதிகம் தின்றால் தொண்டை கட்டும். வயிற்றுக்கோளாறு ஏற்படும்.

அன்னாசிப்பழத்துடன் தேன்கலந்து உண்ண பெண்களுக்கு வெள்ளைப்படுவது நிற்கும். சர்க்கரைப்பாகுடன் உண்டால் மண்டை குத்தல் நிற்கும். தலைவலி, கண், காது, மூக்கு, இருதயம், தொண்டை, நாக்கு, பற்கள் தொடர்பான உபாதைகள் தீரும்.
இப்பழம் வாந்தி, பித்தம், தாக வறட்சி, காமாலை, மாதவிடாய் கோளாறுகளில் நல்ல பலனை அளிக்கும். சொறி, சிரங்கை ஆற்றும். சிறுநீரை பெருக்கும். மலத்தை இளக்கும்.

பலாப்பழம்: இப்பழம் சத்துக் குறைவானது. ஆனால் ஆசிய நாடுகளில் முக்கிய ஆகாரமாக பயன்படுகிறது. பலாப்பழத்தை அதிகம் சாப்பிட்டால் வயிற்றுப்போக்கு ஏற்படும். பலாக்காய் பசிமந்தம் ஏற்படுத்தினாலும், வலிமையையும், தாதுவிருத்தியையும் கொடுக்கும். கொட்டை முற்றாத பிஞ்சுகளை உபயோகித்தால் பசி உண்டாகும்.

பலாப்பழத்தின் சுவை விரும்பி உண்ணச்செய்யும். அதன் விரும்பத்தகாத விளைவுகளை முறியடிக்க சுத்தமான தேன் சாப்பிடலாம்.

## அமோக விளைச்சல் தரும் நெல் அறிமுகம்

ராமநாதபுரம், : அமோக விளைச்சல் தரும் புதிய நெல் ரகம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.நடப்பு ஆண்டில் குறுவை சாகுபடியாக கோ.51 எனும் புதிய நெல் ரகத்தினை விவசாயிகள் பயன்படுத்தி அமோக விளைச்சல் பெறலாம். கோ.51 நெல் ஆடுதுறை 43, ஆர்ஆர்272-1745 என்ற ரகங்களைக் கொண்டு இனப்பெருக்கம் செய்து உருவாக்கப்பட்டதால் ஒவ்வொரு குத்துக்களிலும் அதிகப்படியாக தூர்கள் வெடிப்பதுடன், ஒவ்வொரு தூரிலும் நெல் மணிகள் அதிகப்படியாக காணப்படுகின்றன. எனவே, ஏக்கருக்கு 12 டன் என்ற அளவில் அதிகப்படியான விளைச்சல் கிடைக்கும் வாய்ப்புள்ளது.குறுகிய வயதுடைய (105-

110 நாட்கள்) இருப்பதால் நாட்கள் குறைவாகவும், அதனால் நீர்த்தேவை குறைவாகவும், சாகுபடி செலவு குறைவதுடன் அதிக மகசூலும் அதன்மூலம் அதிக வருவாயும் கிடைக்கும்.

மேலும், குலைநோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு சக்தி கொண்டதாகும். மோசமான பருவநிலையையும் தாங்கக்கூடியது. கோ 51 நெல் விதைப்பண்ணை மூலம் பெறப்படும் அனைத்து நெல்விதைகளும் கொள்முதல் செய்யப்பட்டு, விதை சுத்திகரிப்பு செய்து, சான்றட்டை பொருத்தியதும் முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு விதை உற்பத்திக்காக விநியோகிக்கப்பட்டு வருகிறது என வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அக்.21ல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

சிவகங்கை, : சிவகங்கையில் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் அக்.21ல் நடக்க உள்ளது.

இது குறித்து மாவட்ட நிர்வாகம் கூறியுள்ளதாவது: மாவட்ட விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் அக்.21ம் தேதி காலை 11 மணிக்கு சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் நடக்க உள்ளது.

கலெக்டர் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் வேளாண், தோட்டக்கலை, மின்வாரியம், குடிநீர் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த உயர் அலுவலர்கள் கலந்துகொள்ள உள்ளனர். இதில் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் கலந்துகொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.